**தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகம் - 2014**

---

தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாதங்களில் தீர்வையாகும் என எதிர்பார்க்கப்பட்ட சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 12 மாதங்களில் தீர்வையாகும் என எதிர்பார்க்கப்பட்ட பதவியணியினர் கடன்கள் ரூபா 3,304,121 தொகை நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கருத்திற்கொள்ளக்கூடிய முன்னைய காலப்பகுதிக்கான தவறுகள், அவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் பிழை ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட்டதன் பிரகாரம் பின்னோக்கி சரி செய்யப்பட வேண்டிய போதிலும், முன்னைய காலப்பகுதிக்கான தவறுகள் ரூபா 7,598,116 தொகையான வரவு மற்றும் ரூபா 4,357,288 தொகையான செலவு மீதிகள் இனங்காணப்பட்டதன் பின்னர் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக முன்கொண்டு வரப்பட்ட பற்றாக்குறையுடன் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் விரைவாக மாற்றமடையக்கூடிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக வருடாந்தம் மீள் மதிப்பீடு நியாயமான பெறுமதியில் கருத்திற் கொள்ளக் கூடியளவு மாத்திரம் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக எவ்வித மீள் மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

அரச மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்சொத்துக்களை காலக்கழிவு செய்வது தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அரச மானியங்களின் பெறுமதி ரூபா 596,385,686 தொகையாக இருந்ததுடன், அது பிரதிநிதித்துவப்படுத்திய தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 413,101,215 ஆக இருந்தன.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 973,417 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் நிறுவகத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 19,493,690 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் நியாயமான பெறுமதியை காட்டுவதற்காக மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டியிருந்த கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 தொங்கல் கணக்கு**

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 2011 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் இனங்காணப்படாத தொங்கல் கணக்கின் மீதி ரூபா 85,433 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 88,246,308 கூட்டுத்தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் அறவிடவேண்டிய ரூபா 5,913,500 பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படாமல் இருந்ததுடன், குறித்த மாணவர்கள் பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருந்தமையால் கட்டண அறவீடு நிச்சயமற்ற நிலைமையாக இருந்தது.

(ஆ) 2001 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடவேண்டியிருந்த ரூபா 3,659,854 தொகையான விடுதிக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 15,000 தொகையான பிரயாணச் செலவின முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 3 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து வரும் ரூபா 137,200 தொகையான மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 184,472 தொகையான இடர் கடன்கள் மற்றும் ரூபா 193,920 தொகையான சுனாமி கடன் மீதிகளிலிருந்து ஆண்டினுள் எவ்வித தவணைப் பணமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டம் | நிறுவகத்தில் ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 09 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினது II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வெற்றிடங்களாக காணப்பட்ட 20 பதவிகளுக்காக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 676,826 தொகையும் முன்னைய ஆண்டின் போது ரூபா 663,756 தொகையும் பதில் கடமைப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | மீளாய்வாண்டினுள் 40 அலுவலர்களிற்கு ரூபா 20,000 எல்லையை மிகைத்து ரூபா 2,441,413 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 413,175,070 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 31,211.625 பெறுமதியான கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) 4.2.1 ஆம் பந்தி | குறைந்தது 3 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கும் வகையிலும் வருகின்ற ஆண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகளை விபரமாக காண்பிக்ககூடிய வகையிலும் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகம் இத்தேவைப்பாட்டை நிறைவேற்றியிருக்கவில்லை. |

(ii) 5.4.12 ஆம் பந்தி

ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2011 திசெம்பர் 13 ஆந் திகதிய DMS/E4/50/7/298/ 1(vol)1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம்

- அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் ஒப்பந்த அடிப்படையிலும் தற்காலிக அடிப்டையிலும் 14 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 4,284,738 தொகையும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 5,358,830 தொகையுமாக படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

- கடிதத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக நாளாந்தம் ரூபா 378 வீதம் சம்பளக் கொடுப்பனவு அடிப்படையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 15 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் 71.01 மில்லியன் பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 62.28 மில்லியனாக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 8.73 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று தென்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 19.35 மில்லியனால் அதாவது 14.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 28.1 மில்லியனால் அதாவது 14.6 சதவீதத்தினால் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது. செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை தொடர்பில் பதவியணியினர் செலவினம் ரூபா 19.04 மில்லியனால் அதாவது 23.7 சதவீதத்தினாலும் பயிற்சிக்கான செலவினம் ரூபா 9.67 மில்லியனால் அதாவது 31.4 சதவீதத்தினாலும் உடன்படிக்கை சேவைச் செலவினங்கள் ரூபா 7.94 மில்லியனால் அதாவது 41.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கடந்த 03 ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்த 13 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளுக்காக 1155 மாணவர்களைச் சேர்த்து 13 பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 667 மாணவர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தனர். மேலும் முன்னைய 03 ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 2,343 மாணவர்களில் 452 மாணவர்கள் பாடநெறிகளைக் கைவிட்டிருந்தனர்.

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில் பயிற்சி சான்றிதழை (NVQ) மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் மட்டக்குளி உட்பட 06 பிராந்திய கல்லூரிகளில் 07 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த 123 மாணவர்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு மூலம் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைய முடியாததன் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து அச்சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த 03 வாகனங்களின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுவகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு நிலுவையாக ரூபா 846,450 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், ஊழியர்களால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 338,580 தொகையை குறித்த ஊழியர்களிடமிருந்து கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் ரூபா 697,854 தொகையான இரத்துச் செய்யப்பட்ட 55 காசோலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பிராந்திய கல்லூரிகளுக்காக மீளாய்வாண்டின் போது திறன்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஏற்பாடான ரூபா 40 மில்லியனைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயிற்சி உபகரணங்களில் 50 வகையான உபகரணங்களுக்கு அண்மித்த அளவு 2015 யூன் வரையிலும் உரிய பிராந்திய கல்லூரிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டில் நடாத்துவதற்கு எதிர்ப்பார்த்த பயிற்சி பாடநெறிகள் 2015 முதல் அரையாண்டிலேனும் ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த சில பயிற்சி உபகரணங்களைப் பொருத்துவதற்கு / பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்த உபகரணங்கள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்று காணப்பட்டன.

### 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் பராமரிக்கப்படுகின்ற மாணவர் விடுதியொன்றிற்காக மாகாண மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் தற்போதைய வாடகை ரூபா 60,000 ஆக இருந்த போதிலும், நிறுவகத்தினால் 2013 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2015 மார்ச் 01 ஆந் திகதி வரை 02 வருட காலத்திற்காக மாதாந்தம் ரூபா 70,000 வீதம் குத்தகை வாடகையொன்று செலுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவ்விரண்டு ஆண்டுகளுக்காக நிறுவகத்தினால் மதிப்பீட்டு வாடகை பெறுமதியை விஞ்சி ரூபா 240,000 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆளுகை சபை மற்றும் கலைப்பீட அங்கத்தவர்களால் முக்கியமான தீர்மானங்களை வழங்கும் போது அனுசரணையை கௌரவிப்பதற்காக

நடாத்தப்பட்ட இராப் போசன உபசரிப்பிற்காக ரூபா 102,146 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) முன்னாள் சனாதிபதி ஒருவரின் பதவி நிறைவு மற்றும் பொது நலவாய நாடுகளின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதற்காக பத்திரிகைகளில் வாழ்த்து தெரிவிக்கும் அறிவித்தலை வெளியிடுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 868,806 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடனான சொத்துக்கள்**

நிறுவகத்தின் 12 வாகனங்கள் 1 வருடம் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டதுடன், இவ்வாகனங்களை திருத்தியமைத்து பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் பிரச்சார நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,787,456 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தது.

**4.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

**4.7.1 யாழ்ப்பாண பயிற்சி பாடசலைக்காக புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.**

யாழ்ப்பாணம் 'குருநகர்' இல் அமைந்துள்ள தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் (கடல்சார் பல்கலைக்கழகத்தின்) பயிற்சிப் பாடசாலைக்காக வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் ரூபா 44,768,867 தொகை செலவு செய்து புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், நிறுவகத் தலைவரினால் அங்கீகரிக்கப்படாத மதிப்பீட்டுப் பொழிப்பொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்நிர்மாணத்திற்காக நிறுவகத்தினால் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டாவது குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரரின் 10 கிரய மதிப்பீடுகள் தவறாக தயாரிக்கப்பட்டு திணைக்கள கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டமையால் குறைந்த விலை சமர்ப்பித்த தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. திணைக்கள கொள்வனவுக் குழுவும் இது தொடர்பாக முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ளாமல் தகைமையான ஒப்பந்தக்காரர்களை நிராகரித்து இரண்டாவது ஒப்பந்தக்காரருக்கு கேள்வியை வழங்க பரிந்துரை செய்திருந்தது.

(இ) ஒப்பந்த ஆவணங்களைத் தயாரிக்கும் போது அளவீட்டுப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய பல விடயங்கள் மேலதிக வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி பட்டியலுக்காக கொடுப்பனவு செய்யும் போது இரண்டு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 202,401 தவறுதலாக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கட்டிட நிர்மாணத்தின் போது மதியுரையாளரால் அல்லது அவரின் தரப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் வேலைத்தளத்தில் தங்கியிருப்பதன் மூலம் நிர்மாண நடவடிக்கைகள் நிரந்தரமாக மேற்பார்வை செய்யப்பட்டமை உறுதி செய்யப்படவில்லை.

(ஊ) ரூபா 114,730 தொகை செலவு செய்து இரண்டாவது மாடிக்கு மேலே கொங்கிரீட் தளமொன்றை அமைத்து நீர்த்தாங்கியைய பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்விடத்தில் நுழைவதற்கு நுழைவு வழியொன்று நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பான திட்டங்களில் நிதி ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடம் 2015 பெப்ரவரி 06 ஆந் திகதி நிறுவகத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், பாரியளவிலான பல குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அக்குறைபாடுகள் 2015 யூன் வரையிலும் ஒப்பந்தக்காரரால் மீண்டும் சீர்செய்யப்பட்டு வந்திருந்ததுடன், அதன் பிரகாரம் போலியான முறையில் கட்டிடம் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட கட்டிடம் நிறுவகத் தலைவரின் எழுத்துமூல அனுமதியொன்றோ அறிவித்தலொன்றோ இல்லாமல் ஒப்பந்தக்காரரால் மீண்டும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கட்டிடத்தின் குறைபாடுகளை திருத்தவதற்காக ஒப்பந்தக்காரருக்கு அனுமதி வழங்கியமை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

**(ஏ) தலைவரின் அலுவலக கட்டிட நிர்மாணம்**

ரூபா 29,319,231 மதிப்பீட்டுப் பெறுமதியான தலைவரின் அலுவலக கட்டிட நிர்மாண ஒப்பந்தம் மூன்று கட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) I ஆம் கட்ட ஒப்பந்தம் ரூபா 9,574,517 ஆன (பெறுமதி சேர் வரியுடன்) உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்கு 2012 யூன் 06 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் 2012 யூன் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், நிர்மாண நடவடிக்கைகள் 2014 சனவரி 30 ஆந் திகதி வரை 02 வருடங்களும் 04 மாதங்களும் கால தாமதமாகியிருந்த போதிலும் அதற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தின் பெறுமதி ரூபா 17,817,308 ஆக இருந்ததுடன், முதலாவது கட்ட நிர்மாணங்களை மேற்கொண்ட ஒப்பந்தக்காரரின் செயலாற்றல் பலவீனமானதென நிறுவகம் இனங்கண்டிருந்த போதிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத்தின் ஒப்பந்தத்திற்காக மீண்டும் விலைகோரல் மேற்கொண்டு அவ்வொப்பந்தத்தை கையளித்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2015 செப்தெம்பர் வரையிலும் பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**4.8 முறைப்படி கையேற்கப்படாத காணி/ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மட்டக்குளியில் அமைந்துள்ள நிறுவகத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச ரீதியில் அமைந்துள்ள 08 கல்லூரிகளின் ஆதனங்களை மேம்படுத்துவதற்கும் புதிய நிர்மாணங்களுக்காகவும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 309,196,639 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த ஆதனங்களின் உரித்து நிறுவனத்திடம் காணப்படாமல் இருந்ததுடன், உரித்து கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 07 கப்பல்களை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 11,750,593 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 06 கப்பல்களின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுவகத்தால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக நிறுவகத்தின் 05 உத்தியோகத்தர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் மூன்று பேருக்கு சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 796,250 தொகையும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 1,951,281 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**4.10 பதவியணியினர் நிர்வாகம்**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 286 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 187 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 99 ஆக இருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவகத்தின் உயர்மட்ட முகாமைத்துவ பதவிகளான 4 பணிப்பாளர் பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டதுடன், கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் மூலம் நிறுவகத்தின் நாளாந்த நடவடிக்கை மேவுகை செய்யப்பட்டிருந்தன.

(ii) சிரேஷ்ட விரிவுரையாளர் உட்பட 17 விரிவுரையாளர் பதவிகள் மற்றும் கண்காட்சியாளர் மற்றும் 19 கல்லூரி மதியுரையாளர் பதவிகள் உட்பட கல்விசார் பதவியணியில் 36 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், கல்லூரி விரிவுரையாளர் பதவிகள் மற்றும் கல்லூரி மதியுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக திறன்தொழில் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியங்களிலிருந்து 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 166,566 தொகை செலவு செய்து பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை வரையிலும் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் கல்லூரிகளில் பயிற்சி பாடநெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தன. ‘‘கல்லூரி மதியுரையாளர்களாக நிறுவகத்தில் இருந்த தகைமையான 08 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாக‘‘ உப வேந்தரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக அவசர சேவைகள் அல்லாத நிறுவகத்தின் நிரந்தர பதவிகளுக்காக பணிக் கையளித்தல் அடிப்படையில் 03 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போதும் முன்னைய

ஆண்டின் போதும் முறையே ரூபா 1,280,000 தொகையும் ரூபா 610,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 50,000 மற்றும் ரூபா 40,000 வீதம் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆம் திகதிய 21 ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதி 174 நாட்கள் தாமதத்தின் பின்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது நிறுவகத்தின் அனைத்து துறைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 3 பட்டப்படிப்பு பாடநெறிகள், டிப்ளோமா மற்றும் 13 சான்றுப்பத்திர பாடநெறிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பாடநெறி வருமானம் உட்பட ஏனைய எதிர்பார்க்கப்பட்ட வருமானம் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,900,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 பாடநெறிகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத இரண்டு நிர்மாண விடயங்களுக்காக ரூபா 15,522,165 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதிடப்பட்ட செலவினத்தை மிகைத்து உள்ளவாறான செலவினம் 11 சதவீத்ததிலிருந்து 503 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) கொள்வனவு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) பதவியணியினர் நிர்வாகம்